DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 303/2023**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **ஆறுமுகம்** | Caste | : | |
| Father Name | : | **கேசவ கவுண்டர்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **22.06.2026.**

**PW - 11**

**(**எதிரி ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் விழுப்புரம் மாவட்டம், கல்பட்டு கிராமம், ராகவன் பேட்டையில் வசிக்கிறேன். விவசாயம் செய்கிறேன். சாட்சி அலங்கராம் எனது மனைவி. சாட்சிகள் பொன்னியம்மாள், எல்லம்மாள் ஆகியோர் எங்களது மகள்கள். வழக்கில் இறந்துபோன பிரபு என் மகன். ஆஜர் எதிரியை தெரியாது. பிரபுவிற்கு யாருடனும் திருமணம் நடக்கவில்லை. என் மகன் பிரபு இறப்பதற்கு முன்பு முசிறிக்கு அருகே உள்ள செங்கல் சூளையில் வேலை செய்தார். எனது மகளின் மகள் திருமணத்திற்கு பிரபு வரவில்லை. அந்த திருமணம் 2022 ல் நடந்தது. எதிரி ரேகா அந்த திருமணத்திற்கு வந்தார். ஆனால் என் மகன் பிரபு வரவில்லை. என்னவென்று எதிரியிடம் கேட்டேன். அதற்கு எதிரி என்னிடம் என்னை மட்டும் பிரபு அந்த கல்யாணத்திற்கு போக சொன்னதாக சொன்னார். 2022 ல் முசிறி காவல் நிலையத்தில் எதிரி ரேகாவை கல்யாண வீட்டிலிருந்து

அழைத்து சென்று வைத்திருந்தனர். சேம்பர் உரிமையாளர் சண்முகம் என்பவரும் காவல் நிலையம் வந்தார். சேம்பரில் சென்று போலிசார் பிரபுவிற்கு என்ன ஆனது என்று கேட்டார்கள். தனபால், சண்முகம் மற்றும் ஒருவர் ஆகியோர் எங்களிடம் முன்னாள் போன என் மகன் பிரபுவை மூன்றாவதாக போன நபர் பைப்பால் தலையில் அடித்ததாக ரேகா போலிசாரிடம் சொன்னார். என் மகன் பிரபு இறந்துவிட்டார். என் மகன் எதனால் கொல்லப்பட்டார் என்றால், எதிரியை என் மகன் வேறு இடத்திற்கு வேலைக்கு அழைத்துள்ளார். அதனால் எதிரி மேற்படி நபர்களிடம் பிரபுவை எதாவது செய்துவிடும்படி சொன்னதால் அவர்கள் என் மகனை அடித்துப்போட்டுவிட்டனர். அடித்தவர்கள் எதிரி ரேகாவிடம் இனிமேலாவது நீ நிம்மதியாக இரு என்று சொல்லியுள்ளார்கள். என் மகன் இறந்ததற்கு எதிரி ரேகா தான் காரணம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னை போலிசார் விசாரித்தபோனது தனபால், சண்முகம் மற்றும் ஒருவர் ஆகியோர் எங்களிடம் முன்னாள் போன என் மகன் பிரபுவை மூன்றாவதாக போன நபர் பைப்பால் தலையில் அடித்ததாக ரேகா போலிசாரிடம் சொன்னார் என்று முதல்விசாரணையில் சொன்ன விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மகன் எதனால் கொல்லப்பட்டார் என்றால், எதிரியை என் மகன் வேறு இடத்திற்கு வேலைக்கு அழைத்துள்ளார் என்றும், அதனால் எதிரி மேற்படி நபர்களிடம் பிரபுவை எதாவது செய்துவிடும்படி சொன்னதால் அவர்கள் என் மகனை அடித்துப்போட்டுவிட்டனர் என்றும், அடித்தவர்கள் எதிரி ரேகாவிடம் இனிமேலாவது நீ நிம்மதியாக இரு என்று சொல்லியுள்ளார்கள் என்றும் முதல்விசாரணையில் சொன்ன விவரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மகன் இறந்ததற்கு எதிரி ரேகா தான் காரணம் என்று போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சொல்கிறேன்

என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் எதிரி சொல்லி எனக்கு தெரியும். பிரபு இறந்தது எனக்கு நேரடியாக தெரியாது. எதிரி என்னிடம் எந்த விவரமும் சொல்லவில்லை என்றும் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.